# அருள் ஒளி



இதழ்: 168 ஆனி~ 2025

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (ஆனி – 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## என் கடன் பணி செய்து கிடப்பதே

ஆசிரியர் உரை

இந்த இதழின் ஆசிரியர் பதிவின் தலைப்பு அப்பர் பெருமானின் திருவாக்கு. நல்ல பணிகள் செய்பவர்கள் நாளும் போற்றப்படுவார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தொண்டாற்றி மேன்மையுற்றவர். திருமுறைகளை அர்ச்சித்தது மட்டுமின்றி திருத்தொண்டினால் உயர்வு பெற்றவர். இன்று நமது சமூகம் நல்ல தொண்டு பணிகளை ஆற்ற வேண்டும். தொண்டுப் பணிகளை ஆற்றுபவர்கள் தூய நோக்கோடு பணியாற்ற வேண்டும்.

தவத்திரு யோகர் சுவாமிகள் திருத்தொண்டுப் பணியை ஊக்கிவிப்பதற்காக சிவ தொண்டர் நிலையம் என்ற ஒன்றை உருவாக்குமாறு வேண்டினார்கள். சிவ தொண்டர் நிலையம் என்பது சிவப் பணிகளை ஆற்றுகின்ற சிந்தனைகளை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது. முன்னோர்கள் திருத்தொண்டு ஆற்றுகின்ற பணிகளிலே ஆண்களையும் பெண்களையும் ஈடுபடுத்தினர். பொதுவாக திருத்தொண்டு பணி என்பது பலருக்கு உணவு வழங்குவது தாக சாந்தி நிலையம் அமைத்து தாகம் தீர்ப்பது திருக்கோயில் தொண்டு செய்வது பல நன்மை கருதி தண்ணீர் ஊற்றுக்கள் திருகேணிகளை அமைப்பது.

திருக்குளங்களை காலத்துக் காலம் சுத்தம் செய்வது, விருட்சம் நிறைந்த மரங்களை உண்டாகி பாதுகாப்பது, ஏழை வறுமைப்பட்ட மக்களுக்கு உதவுவது, மூத்தோர்கள் மற்றும் பசுக்கள் போன்ற உயிரினங்களுக்கு பணிவிடை செய்வதெல்லாம் உயர்ந்த திருத்தொண்டாக எம் முன்னோர்கள் வகுத்து வைத்தார்கள் சேக்கிழார் புராணம் படைத்த திருத்தொண்டர் தொகை புராணத்தில் திருத்தொண்டாக்கி இறைவனின் திருவருளைப் பெற்ற அனுபூதிமான்களின் பெருமை பேசப்படுகிறது .

எனவே இன்றைய சூழலிலும் திருத்தொண்டு பற்றி நாம் நன்கு அறிய வேண்டும்.

கல்வியை பிறருக்கு வழங்குதல் கல்வியை ஊக்குவித்தல் அறியாமை என்கின்ற இருளைப் போக்குதல் போன்ற அரிய பணியும் திருத்தொண்டு தான். எனவே ஆசிரியராகப் பணியாற்றுபவர்கள் மிகப் பொறுப்பு வாய்ந்தவர்கள். உயிர்களுடன் பழகுபவர்கள். எதிர்காலத் தலைமுறையை நல்ல முறையிலே ஆற்றுப்படுத்துகின்ற ஆசிரியர் பணி பெரிய திருத்தொண்டு ஆசிரியப் பணியில் ஈடுபடுபவர்கள் ஆசு என்கின்ற இருளைப் போக்குவதற்கு ஆயத்தமாக வேண்டும். இன்று இளைய தலைமுறைகளிடத்தே நல்ல பழக்க வழக்கங்கள் வற்றிப் போகின்றது. தொண்டு ஆற்றுகின்ற பணிகள் தேய்ந்து போகின்றது. நல்ல வார்த்தைகளை உச்சரிப்பவர்கள் குறைந்து கொண்டு போகின்றது.

இந்நிலையை மாற்றுவதற்கு பள்ளித்தலங்களில் ஆசிரியர்கள் முயற்சி செய்ய வேண்டும். இன்று பல்வேறு க்'டங்களை திருத்தொண்டுகள் ஆற்றுகின்றவர்கள் அனுபவிக்கின்றார்கள். எத்தனையோ க்'டங்களுக்கு மத்தியில் நோய்வாய்ப்பட்ட நோயாளிகளை சலிப்பு இன்றி வைத்தியசாலைகளிலே இரவு பகலாக உயிரைக் காக்கின்ற உத்தம பணி செய்கின்ற மருத்துவர்கள் கூட இன்று விமர்சிக்கப்படுகிறார்கள். வைத்தியர்கள் தெய்வத்துக்கு சமமானவர்கள். அவர்கள் செய்கின்ற தொண்டு அளப்பெரியது.

எனவே தூய பணி ஆற்றுகின்ற அத்தனை பேரையும் வாழ்த்துவதும் அவர்களை உற்சாகப்படுத்துவதும் புதியவர்கள் செயற்கரிய காரியங்கள் செய்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டியதும் காலத்தின் கட்டாயம் ஆகும். எனவே தொண்டு செய்பவர்களை வாழ்த்துங்கள். போற்றுங்கள். தெய்வத்தொண்டாக

ஒவ்வொரு செயலையும் கருதி கொள்ளுங்கள். எம் சமூகத்தில் ஆசிரியர்கள் வைத்தியர்கள் மற்றும் சமூகத்தின் தேவை கருதி செயற்படுகின்றவர்கள் தங்கள் நேரத்தை ஒதுக்கி நல்ல காரியம் செய்கின்றபோது பக்கபலமாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே திருத்தொண்டு என்பது தெய்வத் தொண்டு, பிறருக்கு செய்கின்ற கைங்கரியம் திருத்தொண்டு அத்தொண்டில் ஈடுபவர்களை வாழ்த்துவோம்..... வணங்குவோம்....

கலாநிதி. ஆறு. திருமுருகன்
ஆசிரியர் ~ அருள்ஒளி

## தங்கப் பதக்கம் வென்ற துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அறநெறிப் பாடசாலை மாணவி




தெல்லி நகர் அன்னையின் தொண்டரும் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின், அறநெறிப் பாடசாலை மாணவியுமான செல்வி நிரோஷன் நர்த்தகி அவர்கள் கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினை பரிசாக பெற்றுக் கொண்டுள்ளார்.

இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றி, தனது திறமையை வெளிப்படுத்தி செல்வி நிரோஷன் நர்த்தகி அவர்கள் தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்கள்.



க. கபிலன்




# சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் தோற்றமும் வளர்ச்சியும்

இலங்கையின் வடபாகத்திலே சக்தி வழிபாட்டுக்குரிய கோயில்களில் முக்கியமான ஒரு கோயிலாக இன்றும் சுதுமலைப்பதியிலே சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயில் விளங்குகின்றது. சிவன் கோயில் , முருகன் கோயில் மற்றும் வைரவர் ஆகிய கோயில்களுக்கு மத்தியில் கம்பீரமான தோற்றத்தில் அருள்பாலித்து வருகின்றார் புவனேஸ்வரி தாயவள்.

இன்னும் சொல்லப்போனால் உத்தரத்தில் (வடக்கில்) ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானம், தெட்ஷணத்தில் (தெற்கில்) யாழ் - வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் தேவஸ்தானம் (நாச்சிமார் கோயில்), பூர்வத்தில் (கிழக்கில்) இணுவில் காரைக் கால் சிவகாமி அம்மன், பச்சிமத்தில் (மேற்கில்) நவாலி களுவோடை அம்மன் முதலிய கோயில்க ளுக்கு மையமாக அமைந்து விளங்குவது ஸ்ரீ புவ னேஸ்வரி அம்பாள் கோயில் ஆகும்.

அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் தோற்றமும் வளர்ச்சியும் ”கண்ணகி” களை தீர்த்த இடத்தில் ஒரு கொட்டில் கோயில் அமைத்து ”தங்கு சங்களை” என்ற பெயருடன் சுதுமலைக் கிராம மக்கள் கண்ணடு அம்மனை வணங்கி வந்தனர். இக் கொட்டில் கோயில் அமைந்த நிலம் சேர். இராமநாதனின் தந்தை பொன்னம்பலம் முதலியாரால் வழங்கப்பட்டதாக திரு.ஆ. வைத்திலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற ” The Life of Sir Ponnampalam




Ramanathan> Colombo 1971 ” என்ற நூலின் வாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது. இச் செய்தி ஆங்கிலத்தில் மேற்கண்டவாறு தரப்பட்டுள்ளது.

”Dharmavan Ponnambalam restored and largely endowd the ancient temple dedicated to Bhuvaneswari at Suthumalai> which is between Manipay and Anaikkottai> The descendants of the officers whom he appointed to the temple are still doing service in return for the land held by them "

ஒருநாள். இவ்வூர் அன்பர் ஒருவர் உச்சி வேளையில் உழுது கொண்டு நிற்கும் சமயம் ஓர் மூதாட்டி, பால்போல் நிறமுள்ள நரைத்த மயிர், தொழதொழத்த உடல் வெண்ணிற ஆடை அணிந்தவராகச் சோலைகள் நடு மத்தியிலே நிற்பதை அவதாவித்தார். உழுதுகொண்டு நின்றவர் ஓர் சக்தி உபாசகர். ”நின்றும் கிடந்தும் நினைப்பதுன்னையே” என்ற பொன்மொழிக்கு ஆளாகிய நிலையில் வாழ்ந்தவர்.

அவர் தமது வேலையை அப்படியே விட்டுவிட்டு அவ்வயது முதிர்ந்த மூதாட்டியிடம் சென்றார். அம் மூதாட்டி தனக்கு தாகம் அதிகம் குடிப்பதற்கு நீர் தேவையெனக் கூறினாராம். உபாசகர் மூதாட்டியை அவ்விடத்தில் சிறிது நேரம் தங்கும்படி கூறிவிட்டு அருகாமையிலுள்ள தனது வீட்டிற்குச் சென்று இளநீருடன் மீண்டும் அவ்விடம் வந்து பார்த்தபொழுது மூதாட்டியைக் காணவில்லை. உபாசகர் எங்கும் தேடிக்களைப்புற்று மனம் சோர்ந்து வீடு திரும்பினார். அன்றிரவு முதாட்டியின் தோற்றத்தில் உபாசகருக்குக் காட்சி கொடுத்து தன்னை அதே இடத்தில் ஆதரிக்கும்படி ஆஞ்ஞையிட்டு மறைந்தருளினார். அந்த உபாசகர் அந்த அதிசய ஆஞ்ஞையை மற்றும் சுற்றத்தாருக்கும் சொல்லி வியப்பும் பெருமிதமும் அடைந்தார்.

அவ் உபாசகரும் ஊர் மக்களும் ஒன்றுசேர்ந்து அம்மூதாட்டி தோற்றமளித்த இடத்தில் கொட்டில் கோயில் அமைத்து உருவச்சிலையொன்றை வைத்து வைகாசி மாதத்தில் பொங்கல், குளிர்த்தி, அவியல், படைப்பு போன்ற நிவேதன பொருட்கள்

வைத்துச் சக்தி வழிபாடு, பூஜைகள் முதலியன செய்து வழிபட்டு வந்ததாகக் கர்ணபரம்பரைக்கதை கூறுகின்றது. இவ்விடமே இன்று "தங்கு சங்களை" எனவும் "வற்றாப்பளை" எனவும் போற்றி வணங்கப்பட்டு வருகின்றது. காலக்கிரமத்தில் இவ்விடத்திற்குக் கிழக்குப்பக்கத்தில் இவ்விடத்தை அண்டியதாக கோயில். கல்லினால் அமைக்கப்பெற்று வணங்கி வரப்படுகின்றது. பின்னர் இக் கோவில் "பர்வதா பத்தினி அம்மன் கோயில்" எனவும் "இராஜ இராஜேஸ்வரி அம்மன்" எனவும். "மனோன்மணி அம்மன்" எனவும் தற்சமயம் "சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்" எனவும் போற்றி வணங்கப்பட்டு வருகின்றது.

1893ஆம் ஆண்டு வலிகாமம் மேற்கு பதில் மணியகாரர் திரு.ஏ.வாலுப்பிள்ளை அவர்கள் சமர்ப்பித்த பட்டியலில் இக்கோயில் "பார்வதாபத்தினி அம்மன் கோயில்" என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்கோயில் 1775 ஆம் ஆண்டு மானிப்பாயிலுள்ள பொன்னம்பல முதலியார் என்பவரால் மண்ணினால் கட்டப் பட்டு ஓலையால் வேயப்பட்டுள்ளது என்ப தாகவும் 1882ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள முத்துச்சாமி முதலியாராலும் சுதுமலை யிலுள்ள கதிர்காமர் வேலாயுதர் என்பவராலும் கல்லினால் கட்டப் பட்டது என்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முகாமையாளர் சுதுமலை வேலாயுதர் சுந்தர் ஆவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நித்திய பூசைகள் ஒரு நாளைக்கு இரண்டு முறையும், திருவிழா மே மாதம் 18 நாட்களும் நடைபெறும்.

இப் பட்டியலில் தங்கு சங்களை பற்றிய விபரம் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, "தங்குசங்களை" தான் "பார்வதா பத்தினி கோயில்" என்னும் பெயரில் இவ் விடத்தில் வந்ததென்பதை ஆவணப்படுத்த முடியாவிட்டாலும், கண்ணகை களை தீர்த்த இடமே ஆரம்பத்தில் சக்தி உபாசகராலும், மக்களாலும் வணங்கப்பட்ட இடம் என்பது புலப்படுகின்றது. மேலும் வலிகாமம் மேற்கு பதில் மணியகாரர் திரு.அ.வாலுப்பிள்ளை அவர்களால் 1892ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்து கோயில்களினதும் றோமன் கத்தோலிக்க கோயில்களினதும் பட்டியல் யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் கொழும்பிலுள்ள குடி யிருப்பு காரியதரிசியினது கந்தோரிலிருந்து நவம்பர் 1899 திகதியிட்டு கொழும்பு கறுவாத் தோட்டத்திலுள்ள இல. 50, வார்ட் பிளேசில் வசித்த திரு. ரீ.கனக்குலரத்தினத்தின் விலாசத்திற்கு ஆங்கிலத்தில்



கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டிருப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

In reply tro your letter of the 18 th septemper 1899 I am directed to inform you that His Excellency the Lieutenant Governor has no objection to your granting certain lands to the Hindu Temples and Madam in Jaffna as specified below:-


To: Amman Kovil situated at Chuthumalai in the parish of Manipay> Jaffna.

1.All that land called and known as

Kantharanthalvu and Thatchanthalvu and Kanthraranthalvu of the extent of 21/2 lachams V.C situated at Suthumalai in the Parish of Manipay in ValikamamWest in the Distrct of Jaffna bounded on the East By property of Parupathapattini Amman Kovil on the North by lane> on the West by property of Parupathapattini Amman Kovil and Thankamuttu wife of Nagar Nallatamby and by property of Vallipuram arumugam and his brother kuddipillai > on
the South by property of Parupathapattini Amman Kovil save and except a footpath two Cubits broad> towards the west of this land leading to Thatchanthaivu property of Thankamuttu wife Nagar Nallatampy.

2.All that land called and known as Thatchanthalvu of the extent of 31/4 lachams situated at suthumalai aforesaid bounded on the East by property of Lammavarathar Kengakularatnam> on the north by property of Sri Amman Kovil of suthumalai on the West by property of Kanmani wife of Naganather of Vallipuram Kuddipillai.

இக் கடிதத்திலிருந்து இக்கோயிலுக்கு அரசாங்கத்தினாலும் நிலம் வழங்கப்பட்டிருப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. இக் கோயில் 1822 ஆம் ஆண்டில் கல்லால் அமைக்கப்பட்டு ”இராச இராசபரி அம்மன் கோயில்” எனவும், ”மனோன்மணி




அம்மன் கோயில்” எனவும் அழைத்து வணங்கி வந்ததாகவும் கூறப்படுகின்றது. 1919ஆம் ஆண்டளவில் இருந்தே அக்கோயில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் என அழைக்கப்பட்டு வருகின்றது.

அதாவது 1920ஆம் ஆண்டு யூலை மாதம் 08ஆம் திகதி (சௌத்திரி வருஷம் ஆனி மாதம் உரு தேதி) குருவாரமும் சப்ததிதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய சுப தினத்திலே மிதுன கர்க்கடக சம்பந்த சுப முகூர்த்தமாகிய உதயம் ஆறு மணியளவில் சுதுமலை புவனேஸ்வரி தேவியின் ஆதீன கர்த்தாவாகிய வைத்தியர் அ.முத்துக்குமாரு அவர்களால் ஜீர்ணோத் தாரண சம்புரோஷன் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டிருப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

தலச்சிறப்பு சீற்றம் தனியாத கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கி, தன்னை ஐந்து தலைநாகமாக மாற்றி மதுரை மாநகரைத் துறந்து தெற்கு நோக்கிச் சென்று முதலில் நயினாதீவில் தங்கினாள் என்பதாகவும், பின்பு சுருவில் வட்டுக்கோட்டை பாங்கரில் உள்ள சுருட்டுப் பனை வழியாக நவாலி, களுவோடை, சீரணி. அங்கணாமைக் கடவை, அளவெட்டி, வற்றாப்பளை முதலிய இடங்களில் தங்கினாள் என்பதாகவும் கூறப்படுகின்றது. இச்சமயம் சுதுமலையிலும் தங்கியிருக்கலாம் என ஓர் யூகம் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், தற்சமயம் கண்ணகி சீற்றம் தனியாத கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கி, தன்னை ஐந்து தலைநாகமாக மாற்றி மதுரை மாநகரைத் துறந்து தெற்கு நோக்கிச் சென்று முதலில் நயினாதீவில் தங்கினாள் என்பதாகவும், பின்பு சுருவில் வட்டுக்கோட்டை பாங்கரில் உள்ள சுருட்டுப் பனை வழியாக நவாலி, களுவோடை, சீரணி. அங்கணாமைக் கடவை, அளவெட்டி, வற்றாப்பளை முதலிய இடங்களில் தங்கினாள் என்பதாகவும் கூறப்படுகின்றது. இச்சமயம் சுதுமலையிலும் தங்கியிருக்கலாம் என ஓர் யூகம் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், தற்சமயம் கண்ணகி தங்கிய பல கோயில்களின்



வரலாற்றை நோக்கும்பொழுது கண்ணகி வயது முதிர்ந்த மூதாட்டியாகவே சுதுமலையிலும் தங்கியிருக்கக் கூடும் என்பதாகக் கருதக் கூடியதாக இருக்கின்றது.

இக்கோயில் மூர்த்தி, தலம் , தீர்த்தம் மூன்றிலும் விசேட மகிமை உடையதாக விளங்குகின்றது. மற்றும் கோயிலின் வடக்குப் பகுதி வயலினால் சூழப்பட்ட இயற்கையான இடத்தில் வீற்றுள்ளது. மரங்களுக்கு இராசா அரசமரம். அரசமரம் "சக்தி"யாகவும், ஆலமரம் சிவனாகவும் " சைவமக்களால் நினைந்து வணங்கப்படுகிறது. கண்ணகையம்மன் களை தீர்த்த இடமென பல ஆலமரங்களின் மத்தியில் உள்ள "அரசமரத்தையே" சுதுமலை மக்கள் வணங்கி வந்தபோதும் "கடம்ப மரத்தின்" அருமை பெருமைகளை அறிந்து "கடம்ப மரத்தையே" தல விருட்சமாகக் கொண்டு வலம் வந்து வணங்கி வந்தனர் என்பதற்கு ஆதாரமாக இன்றும் ஓர் "கடம்ப மரம்" "அரச மரத்திற்கு" நேர் எதிராக வடக்குப் பக்கத்தில் இருக்கின் றது. அதனை இன்றும் மக்கள் வலம் வந்து வணங்குகின்ற மையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

## கோயில் அமைப்பு

திராவிடக் கட்டடக்கலை மரபைப் பிரதிபலிக்கும் அழகிய சிற்பவேலைப்பாட்டு டன் கூடிய ஐந்து நிலைகளுடனான இராஜ கோபுரம் ஒன்று முன் வாயிலில் அமைக் கப்பட்டுள்ளது.

கோயில் நுழைவாயில் முன்னால் பிரமாண்டமான மண்டபம் உள்ளது. உள்ளே, கருவறை, அர்த்த மண்டபம். மகா மண்டபம், தர்சன மண்டபம் அல்லது உருத்திர மண்டபம், ஸ்தம்ப மண்டபம், நந்தி பலிபீடம், ஸ்தம்பம், ஸ்தம்ப விநாயகர் உள்ளன. விநாயகர், மகாவி'ணு, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், சண் டேஸ்வரி, வைரவர், நவக்கிரகங்கள் முதலிய வற்றிற்குத் தனித்தனி பரிவாரக் கோயில்கள் சுற்றிவர உள்ளன.

மூலஸ்தான கிழக்குப் பக்கத்தில் "சூரிய சந்திரருக்கு" தனித்தனியாகப் பரிவாரக்கோயில்களும், தென்மேற்கில் விநாயகர் பரிவாரக் கோயிலும் அதற்கு அண்மையில், நால்வருக்குத் தனிப் பரிவாரக் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குப் பக்கத்தில்



சந்தான கோபாலருக்கும், வள்ளி தெய்வானை சமேத முருகனுக்கும் பரிவாரக் கோயில்கள் அமைந்துள்ளன.
வழிபாடு

காலை 06.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையும், வெள்ளி, செவ்வாய் நாட்களில் முற்பகல் 10.30 மணிவரையும், முற்பகல் 11.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரையும், மாலை 04.00 மணிமுதல் 06.00 மணி வரையும் ஆலயம் அடியார்களின் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். நாள்தோறும் ஐந்து காலப் பூசைகள் நடைபெறுகின்றது.

திருவிழாச் சிறப்பு இக்கோயில் வைகாசி பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியதாக மஹோற்சவங்கள் ஆரம்பித்து பதினாறு திருவிழாக்கள் நடைபெற்று பதினேழாம் நாள் தேர்த்திருவிழாவும் பதினெட்டாம்நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். மஹோற்சவ தினங்களில் விநாயகருக்கு ஐந்தாம் நாளும், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியருக்கு ஒன்பதாம் நாளும் பிரத்தியேக வழிபாடுகள் நடைபெறும்.

மஹோற்வச தினங்கள் ஆரம்பமாவதற்கு முதல்நாள் முற்புறமுள்ள காவல் தெய்வமாகிய புட்டியல் வைரவரை, அம்பாளுக்குச் செய்யப்போகும் மஹோற்சவங்கள் யாவும் இனிது நடைபெற்று முடிய வேண்டுமென "அனுஞ்ஞை" கேட்டுப் பிரார்த்திப்பது வழக்கம். பின்னர், தேர்த் திருவிழாவன்று மாலை வெற்றிக்கழிப்பை புட்டியல் வைரவர் ஆலயத்தில் கமுகுநட்டு வெள்ளைக் கொடியேற்றிக் கொண்டாடும் வழக்கம் இன்றுவரை நடைபெற்றுவருகின் றது. தற்சமயம், தேர்முட்டிக்குச் சமீபமாக, இடதுபுறத்தில் (வடக்குப்பக்கத்தில்) ஓர் சிறிய கட்டிடம் அமைத்து, அதில் வைரவர் வழிபாடு நடைபெறுகின்றது. அதற்கும், இவ் வேளைகளில், வழிபாடு நடைபெற்று வருகின்றது.

## ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் திருவுருவ அமைப்பு

ஈழநாட்டைப் பொறுத்த மட்டில் அநேகமான சக்தி ஆலயங்களில்



மனோன்மணி அம்மை யின் திருவுருவமே பிரதிஷ்டை செய்யப்பட் டிருக்கின்றது. இங்கு புவனேஸ்வரி அம்மை யின் சொரூபமே விளங்குகின்றது. மனோன்மணி அம்மன் ஒரு கை அபயமாகவும், மறுகை வரதமாகவும், பின்கை ஒன்றில் தாமரை மலரும், மறு பின்கையில் அட்சமாலையும் விளங்கக்காணலாம். புவனேஸ்வரி அம்பாளின் திருவுருவ அமைப்பு தாமரை மலரில் இருந்துகொண்டு மூன்று கண்கள், பாசம், அங்குசம், அபயம், வரதம் ஆகியவற்றுடன் கூடிய சொரூபமாக இருக்கும். உருவங்கள் வேறுபட்டாலும் ஏற்கனவே கூறியதுபோல் ”ஏகம் தத் ஸத் விப்ரா பஹு-தா வதந்தி” என்பது இந்துக்களின் தீர்க்கமான நம்பிக்கையாகும்.

பொங்கல் வழிபாடு

அம்பாள் காட்சி தந்த தினத்தை நினைவு கூரும் முகமாக அம்பாள் தேரில் வரும்பொழுது கோயில் வீதிகளில் பொங்கல் செய்து மடை பரப்பி அம்பாளை வழிபடும் வழக்கம் இன்றும் நடைபெற்று வருகின்றது. பொங்கல் மட்டுமல்லாது சோறு, கறி, ஒடியற்பிட்டு, குரக்கன்பிட்டு போன்றவையும் செய்து மடைபரப்பப்படுகின்றது. முன்னர் மாமிச வகையும் செய்துபடைத்ததாகக் கூறப்படுகின்றது. இக் காட்சி மனங்கொள்ளாக் காட்சியாக மக்களிடையே இருந்து வருகின் றது. மேலும் அன்று இரவு தங்க சங்குசங்களை கண்ணகி அம்மனுக்கும் பொங்கல் விழா சிறப்புற நடைபெற்று வருகின்றது.

உசாத்துணை நூல்கள்


1.ஸ்ரீ புவனேஸ்வரி மஹா கும்பாபிஷேக சிறப்புமலரும் ஆலய வரலாறும் 2014

2.சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு 1986 தம்பிப்பிள்ளை காசிநாதன்

# எளிமையாக நடைபெற்ற பிறந்தநாள் நிகழ்வுகள்




தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களது பிறந்த நாள் நிகழ்வுகள் 28.05.2025 தேவஸ்தானத்தில் நடைபெற்றது. அதிகாலை விசேட சங்காபிஷேகம் மற்றும் விசேட வழிபாடுகள் நடைபெற்றன. மாலை மரம் நடும் நிகழ்வும் செஞ்சொற்செல்வரின் சேவைகளை கௌரவித்து நினைவுகூரும் நோக்கில் தேவஸ்தானத்தின் நிர்வாக சபையினர் ஏற்பாடு செய்த நிகழ்வும் நடைபெற்றது.









பல்வேறு நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராக பங்கேற்பதற்காக செஞ்சொற்செல்வர் அவர்கள் அவுஸ்ரேலியா மற்றும் கனடா நாட்டிற்கு சென்றுள்ளதால், மிக எளிமையாக இந்த நிகழ்வுகளை நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் மகளிர் இல்லப் பிள்ளைகளுடன் மாத்திரம் தேவஸ்தானத்தின் நிர்வாக சபையினர் ஏற்பாடு செய்தனர்.
















அறம் மற்றும் சமூகத் தொண்டால் உயர்ந்து நிற்கும் கலாநிதி ஆறுதிருமுருகன், ஐயாவிற்கு எங்களது இனிய அகவை தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.




தனது வாழ்க்கை பயணத்தில் புதிய ஆண்டில் தடம் பதிக்கும் எங்கள் ஆறுதிருமுருகன் ஐயாவுக்கு எல்லாம் வல்ல எங்கள் எம்பெருமாட்டியின் அருளும் ஆசிகளும் கிடைக்க மனதார வேண்டிக் கொள்கின்றோம். தெல்லிப்பளை துர்க்காதேவியின் பூரண அருள் பெற்று நலமுடன் வாழ அவள் பாதம் வேண்டி நிற்கின்றோம்.






# கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் சிறப்பு ஆன்மீக உரை




பல்வேறு ஆன்மீக மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக கனடா விஜயம் மேற்கொண்டுள்ள புகழ்பெற்ற ஆன்மீக பேச்சாளரும் எமது நிர்வாக சபைத் தலைவருமான கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள், கனடாவின் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் தனது ஆன்மீக உரையை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு ஆனந்த அனுபவத்தைப் பெற்றனர். நிகழ்வு தொடக்கம் முதலே பக்தியால் நிரம்பிய சூழ்நிலை காணப்பட்டது. இவ்வாறான நிகழ்வுகள் வெளிநாட்டில் வாழும் தமிழரின் ஆன்மீக அடையாளமாகவும், கலாசார மூலதனமாகவும் திகழ்கின்றன என்பது உறுதி. மேலும் இந்நிகழ்வை ஒழுங்குபடுத்திய அனைவருக்கும் பக்தர்கள் நன்றியைத் தெரிவித்தனர்.













# மாவைக் கந்தனின் மகா கும்பாபிஷேக மலர் வெளியிடப்பட்டது



50 ஆண்டுகளுக்கு பின்னர் மாவைக் கந்தவேள் பெருமானுக்கு கடந்த மாதம் 11ம் திகதி மஹா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் தினமும் நடைபெற்று 28.05.2025 புதன்கிழமை மண்டலாபிஷேக நிறைவு நாள் என்பதால்
48வது மண்டலாபிஷேக பெருவிழாவின் உற்சவங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மாவைக் கந்தவேள் பெருமானின் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலரும் அதே வேளை வெளியிட்டு வைக்கப்பட்டது. வில்வ பத்த மலர் எனும் சிறப்பு மலரின் முதல் இரு பிரதிகளும் மூலப் பரம்பொருளான கணபதிக்கும் அவரது தம்பியாகிய மாவைக் கந்தவேள் பெருமானின் திருப்பாதங்களுக்கும் வைத்த பின்னர், ஏனைய பிரதிகள் யாவும் அடியார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.






# ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ சுந்தர மூர்த்தி ஐயர் அவர்களின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது




தெல்லிப்பழை வைசப்பிரகாச வித்தியாசாலையின் ஸ்தாபகரான பிரம்மஸ்ரீ சுந்தர மூர்த்தி ஐயர் அவர்களின் உருவச்சிலை 26.05.2025 திறந்து வைக்கப்பட்டது. தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியார் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

1900ம் ஆண்டு வைகாசி மாதம் 26ம் திகதி திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசலையின் ஸ்தாபகரான பிரம்மஸ்ரீ சுந்தர மூர்த்தி ஐயர் அவர்கள் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியார் அவர்களது தந்தையாராகிய சுந்தரமூர்த்தி ஐயரின் தந்தையாராகிய தியாகராஜ ஐயரின் தந்தையார் ஆவார்.

இந்தப் பாடசாலையின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்ற போது பாடசாலையின் ஸ்தாபகரது உருவச்சிலை, ஒன்றை செய்து தருமாறு கல்லூரிச் சமூகம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், தனது சொந்தச் செலவில் அமைக்கப்பட்ட இந்த உருவச் சிலையை பிரதம சிவாச்சாரியார் அவர்கள் திறந்து வைத்தார்.

1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் பாடசாலை 1901ம் ஆண்டு அரசினர் உதவி பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டு, 1902ம் ஆண்டு முதன்முதலாக வருடாந்த பரீட்சை நடத்தப்பட்டது என்பது வரலாறு.

1921ம் ஆண்டு இந்தப் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்புகள் யாவும் திரு. துரையப்பாபிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பாடசாலை வலி வடக்கு இடப் பெயர்விற்கு முன்பு பல்வேறு காலகட்டங்களில் பல வளர்ச்சிகளை எட்டி சிறந்த பாடசாலையாக எங்கள் ஊரில் இருந்தது.




எங்கள் தெல்லிப்பழை ஊரில் சமயப் பற்றும் சமூகத் தொண்டு செய்கின்ற நல்ல மனப்பாங்கு மிக்க நல்லொழுக்கமுடைய மாணவ சமூகத்தை சிறுவயதில் இருந்தே வளர்த்தெடுக்க வேண்டும் என்ற உயர்வான சிந்தனையில் இந்த பாடசாலையினை பிரம்மஸ்ரீ சுந்தர மூர்த்தி ஐயா அவர்கள் ஸ்தாபித்தார்.

சமூகம் போற்றும் பல சிறந்த கல்வியாளர்களையும் கலைஞர்களையும் நல்ல பண்பாளர்களையும் இந்தப் பாடசாலை வளர்தெடுத்துள்ளது. சிறப்பான கல்வி, விளையாட்டினை மாணவர்களுக்கு வழங்கி எமது தேசத்திற்கு உதவக்கூடிய ஒழுக்கமுள்ள ஆளுமையுடன் கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்குவதற்கு இந்தப் பாடசாலை பெரும் பங்காற்றியிருக்கிறது.

இந்நிலையில் 1995ம் ஆண்டு ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வு காரணமாக இந்தப் பாடசாலையும் தனது வளர்ச்சியில் வீழ்ச்சி காண தொடங்கியது. 500 பிள்ளைகளுக்கு மேல் கல்வி கற்ற இந்தப் பாடசாலை இடப் பெயர்வுக்கு பின்னர் மாணவர்களின் எண்ணிக்கையில் பெரிய வீழ்ச்சியை கண்டது. தற்காலத்தில் நமது சமூகம் குறிப்பாக இளம் பிள்ளைகள் மிக வேகமாக சீரழிந்து செல்வதாக நாங்கள் எல்லோரும் கவலைப்படும் தருணத்தில் சிறந்த ஒழுக்கத்தையும் ஆன்மீகச் சிந்தனையையும் கல்வியுடன் மாணவர்கள் மத்தியில் வளர்த்தெடுக்கும் இது போன்ற பாடசாலைகளின் பணிகள் நமது சமூகத்திற்கு மிக மிக அவசியமான ஒன்றாக உள்ளது.

ஒவ்வொருவருடைய வாழ்விலும் கல்வி கற்றலின் சிறப்பை போலவே தனிமனித ஒழுக்கத்திலும் சிறப்புகள் உண்டு என்பதை இந்த பாடசாலையில் கல்வி கற்று பின் சிறந்த கல்வியாளர்களாகவும், கலைஞர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும், சமூகத் தொண்டர்களாகவும், மாறிய பலர் தங்கள் தனிமனித வாழ்வில் நிரூபித்துள்ளார்கள். எமது சமூகத்திற்கு உதவக்கூடிய நல்லொழுக்கமும் சமயப் பற்றும் அறிவும் கொண்ட மாணவர்களை உருவாக்கி, எமது சமூகத்திற்கு இந்தப் பாடசாலை வழங்கியுள்ள இந்தப் பாடசாலை 125து ஆண்டு நிறைவினை எட்டியுள்ளது.




இருப்பினும் தற்போது மிக மிக குறைந்தளவு மாணவர்களை கொண்டுள்ளதால் எப்போது மூடுவார்கள் என்ற ஏக்கத்துடன், மன வேதனையுடனும் இந்தப் பாடசாலை சமூகம் ஒவ்வொரு நாட்களையும் கழிப்பது பெருந் துயராகும். எங்கள் மண்ணில் மிகப் பழமையான வரலாற்றை கொண்ட இந்தப் பாடசாலைக்கு அருகில் உள்ள ஊர்களில் உள்ள மாணவர்களையாவது இணைந்து கொள்ள பெற்றோர்கள் முன்வர வேண்டும் என பாடசாலை சமூகம் எதிர்பார்க்கின்றது.

நவீன கால மாற்றத்தில் நமது வரலாறுகள் ஒவ்வொன்றையும் தொலைக்கும் சமூகமாக நாங்கள் இருக்காமல், இந்தப் பாடசாலையின் மீட்சிக்கு சகல நல்ல உள்ளங்களும் முன்வந்து உழைக்க வேண்டும் என்பதே இந்தப் பாடசாலை சமூகத்தின் விருப்பமாக உள்ளது



# வழக்கம்பரை முத்துமாரியம்பாள் தேவஸ்தான வரலாறும் அம்பாளின் அற்புதமும்



## கோவிலின் வரலாறு

இது பொருத்தமான தங்குமிடம் என்று கருதி வழக்கம்பரை முத்துமாரியம்மன் இந்த இடத்திற்கு தானாகவே வந்தார் என்பது பொது நம்பிக்கை. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த வழக்கம்பரையில் வில் மரங்கள், மார்கோசா, ஆலமரம், புளியமரம் மற்றும் பிற மரங்களால் நிறைந்ததாக நம்பப்படுகிறது. இன்றும் இந்த பகுதியில் இந்த மரங்களை நாம் காணலாம்.

ஒரு வெயில் நாள் ஒரு இடைப்பையன் தனது மந்தையை கவனித்துக் கொண்டிருந்தபோது ஒரு வயதான பெண்மணி அவரை அழைத்து கொஞ்சம் தண்ணீர் குடிக்க விரும்பினார். அவர் சம்மதித்து அருகிலுள்ள கிணற்றிலிருந்து சிறிது தண்ணீர் கொடுத்தார். பின்னர் அந்த பெண்மணி அந்த பையனிடம் தலைமுடியைக் காண்பித்து தலை கடிக்கிறது. தலையில் பேன் பார்த்து விடும்படி கேட்டுக் கொண்டார்.

அந்த பையன் தலைமுடியை பிரித்ததும் தலை முழுவதும் கண்களாக இருக்கக்கண்டு அச்சமும் ஆச்சரியமும் அடைந்தான். சிறுவன் மற்றவர்களை அழைத்துவந்து பார்த்தபொழுது அவ்வயதான பெண்மணியை காணவில்லை .

அன்று இரவு அவள் அந்த பையனின் கனவில் தோன்றி தான்



அம்பாள் எனவும் தனக்காக ஒரு சிறிய கொட்டில் கட்டும்படி அவனிடம் கேட்கிறாள். மறுநாள் சிறுவன் தனது கனவைப் பற்றி தன் நண்பர்களுக்கும் அயலவர்களுக்கும் சொல்லி ஒரு சிறு கொட்டில் அமைத்து அம்மனை உருவகப்படுத்தி வழிபடத்தொடங்கினான். 1658 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்களும் 1976 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களும் ஆட்சி செய்தனர். ஆகையால் 1658 -1796 காலம் கடைசி டச்சு காலமாகும்.

1912 ஜூலை 22 இல் ஆ.முத்துதம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண வரலாறு புத்தகம், சரவணமுத்து முதலியார் பஞ்சாயத்து நீதிபதியாக இருந்தார் என்றும் அவர் நீதிமன்றம் வைத்திருந்த இடம் "சத்தியகாடு" என்றும் அழைக்கப்படுகிறது. இது அந்தக் காலத்தில் வழக்கம்பரையில் உள்ளது. அவர் காலத்தில் மசூரிகா ரோகம் மிக்க உக்கிரத்தோடு பரவி பெரும்பாலோரை தாக்கியது.

அவர் ஒல்லாந்த ஆளுநரிடம் அனுமதிபெற்று வழக்கம்பரையில் ஒரு மாரியம்மன் கோவிலமைத்து விழாக்கொண்டாடி அவ்வூரில் மிக்க உக்கிரத்தோடு பரவிய ரோகத்தை சாந்தி செய்வித்தனர். இக்கோயில் இன்றும் பிரசித்தி பெற்று விளங்குகிறது.



### தேவஸ்தான கட்டடக்கலை

கிடைக்கக்கூடிய ஆவணங்களின்படி, 1650 ஆம் ஆண்டிற்கு முன்போ அல்லது அதற்கு பின்னரோ இந்த கோயில் சுட்ட செங்கற்களால் அழகக்கோன் முதலியார், சரவணமுத்து முதலியாரால் வழக்கம்பரை என்னும் நிலத்தில் கட்டப்பட்டது.

பின்னர் 1862 ஆண்டளவில் குறிப்பிடவர்களின் வழித்தோன்றல் இராமலிங்கம் கைலாயபிள்ளை



என்பவரால் பொதுமக்கள் செலவில் கற்களால் இக்கோவில் கட்டப்பட்டது என்றும் கூறுவர். (ஆதாரம் : Temple Register 1883>Kachcheri>Jaffna)

இவை அனைத்திலிருந்தும், கிடைக்கக் கூடிய பதிவுகளிலிருந்தும் அக்காலத்திலேயே 1500 ஆட்களுக்கு அதிகமானோர் திருவிழா காலத்தின்போது இக்கோவிலில் கூடுவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தனை பிரசித்தம் பெற்ற தலமாக இருந்துள்ளது. இன்றும் இருக்கிறது.

மேலும் காலப்போக்கில் கோயில் விரிவடைந்து 3 கும்பாபிஷேகம் கோயிலின் தொடக்கத்திலிருந்தே நடைபெற்றுள்ளது. 1988 ஆம் ஆண்டில் ஒரு பெரிய கும்பாபிஷேகம் 4ம் நாள் மற்றும் 6ம் நாள் சித்திரை மாதம் 1988 ம் ஆண்டு நடைபெற்றது. இறுதியாக 2018 சித்திரையில் இல் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தினமும் காலை - 8.00 மணி , மதியம் - 12.00 மணி, மாலை 5.00 மணி என மூன்று வேளைகள் பூஜைகள் நடைபெற்று வருகின்றது. அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் ஆனி மாத பூரணையை தீர்த்தமாக கொண்டு பதினொரு தினங்கள் உற்சவம் நிகழும். புகழ்பெற்ற வட்டுக்கோட்டை தீர்மானம் கோவிலுக்கு அருகிலேயே எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபை 18ம் நாள் ஆவணி மாதம் 1985ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று தேவஸ்தானம் நாளுக்கு நாள் பல வழிகளில் வளர்ச்சி கண்டு வருகிறது.

**தொகுப்பு ~ மு.பாபுஜி**
**பண்ணாகம்**

# கனடா கந்தசுவாமி கோயிலில் விசேடஆன்மீக நிகழ்வு – கலாநிதி ஆறு. திருமுருகன் உரையாற்றுகிறார்




ஆன்மீக ஒளியினை பரப்பும் புனித முயற்சியின் ஒரு பகுதியாக, கனடாவில் அமைந்துள்ள கந்தசுவாமி கோயிலில் வருகிற 13ம் திகதி வெள்ளிக்கிழமை, மாலை 6.30 மணிக்கு, விசேட ஆன்மீக நிகழ்வு நடைபெறவிருக்கிறது.

இந்த நிகழ்வின் சிறப்பு அம்சமாக, எழுத்து, சிந்தனை மற்றும் ஆன்மீக துறைகளில் புகழ் பெற்ற எமது நிர்வாக சபைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் நேரில் கலந்து கொண்டு, அற்புதமான உரையை வழங்கவிருக்கிறார்.

நிகழ்வின் முடிவில், விருந்துபசாரம் வழங்கப்படும். பக்தர்களும், சமூக உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கலந்து கொள்ளும் இந்நிகழ்வு, ஆன்மீக உறவுகளை வலுப்படுத்தும் ஒரு அரிய சந்தர்ப்பமாக அமையும்.

அனைத்து பக்தர்களையும், நண்பர்களையும் இந்த விசேட நிகழ்வில் கலந்து கொண்டு ஆனந்திக்குமாறு மற்றும் அருளை பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அன்போடு அழைக்கிறார்கள்.



# பையவே சென்று பாண்டியற்காகவே

திருஞானசம்பந்த மூர்த்தி எண்ணிறந்த அடியவர்களுடன், அமைச்சர் குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் அமைத்திருந்த திருமடங்களில் எழுந்தருளி இருக்கின்றார்.

அறிவிலிகளான சமணர்கள் பின்னிரவு வேளையில் பாண்டிய மன்னரைச் சந்தித்து “சீகாழியில் சங்கரனாரின் அருள் பெற்றதாகக் கூறிக் கொண்டு வேதியச் சிறுவனொருவன் முத்துச் சிவிகையிலேறி நம்மை வாதில் வெல்ல வந்துள்ளான்! அவர்களின் மடங்களில் வெந்தீமூளச் செய்தால், அச்சமுற்று இந்நகரினின்றும் அகல்வர்“ என்றுரைக்க, மன்னரும் “அங்கனமே ஆகுக“ என்றுரைக்கின்றார்.

கொல்லாமை எனும் கொள்கையைப் பெயரளவில் போர்த்தித் திரியும் அச்சமணர்கள், சிவஞானச் செல்வர் மற்றும் திருத்தொண்டர்கள் தங்கியிருந்த திருமடங்களில் தீ மூளுமாறு சமணமந்திரம் செபிக்கின்றனர். ஆதி மந்திரமான திருஐந்தெழுத்தினை ஓதுவோர் முன் அவமேயான அம்மூடர்களின் மந்திரங்கள் யாது செய்து விட இயலும்? தங்கள் மந்திரங்கள் ஒருசிறிதும் பலனளிக்காதது கண்டு நடுங்கும் அக்கொடியவர்கள் “அரசன் இதனை அறிவானாயின் நம் சமயத்தைத் துறப்பதோடு நம்மையும் தண்டிப்பான்“ என்று

நேரிலேயே சென்று தீமூட்டுகின்றனர்.

விரைந்து பரவும் தீயின் தன்மை கண்டுப் பதறும் அடியவர்கள் ஆளுடைப் பிள்ளையாரிடம் முறையிடுகின்றனர். சீகாழி அண்ணலார் சினமுற்று "ஆ! ஆதிமூர்த்தியின் அடியவர் துயிலும் திருமடங்களுக்குப் பாவிகள் தீயிடுவதோ! குடிகளின் குற்றம் கொற்றவனையே சாரும்" எனும் கருத்துடன், "ஆலவாய் மேவும் பரம்பொருளே, உன் திருவருளால், பொய் நெறியரான இச்சமணர்கள் இட்ட இத்தீ பையவே சென்று பாண்டிய வேந்தரைச் சேரட்டும்" என்று பணித்தருள்கின்றார்,


செய்யனே, திருஆலவாய் மேவிய
ஐயனே, அஞ்சலென்றருள் செய், எனைப்
பொய்யராம் அமணர் கொளுவுஞ் சுடர்,
பையவே சென்று பாண்டியற்காகவே!

சித்தனே, திருஆலவாய் மேவிய
அத்தனே, அஞ்சலென்றருள் செய், எனை
எத்தராம் அமணர் கொளுவுஞ் சுடர்
பத்திமன் தென்னன் பாண்டியற்காகவே

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்கனே, அஞ்சலென்றருள் செய், எனை
எக்கராம் அமணர் கொளுவுஞ் சுடர்
பக்கமே சென்று பாண்டியற்காகவே
சிவம் பேணும் பாண்டிமாதேவியின் திருமாங்கல்யம் காக்கப்படும் பொருட்டும், குலச்சிறையாரின் மீதிருந்த அன்பு கருதியும், இந்நிகழ்வுகளின் தொடர்ச்சியாய்ப் புரவலன் தம்மால் திருநீறு பூசப் பெற்றுச் சைவநெறி பேணவிருக்கும் நியதி கருதியும், சீற்றத்துடன் புறப்பட்ட அச்செந்தீக் கனலை "பையவே" செல்லுமாறு கட்டளையிட்டருள்கின்றார் சிவஞானச் செம்மலார்.

அக்கணமே சிவஅபராதச் செயலின் தன்மையினால் பாண்டிய மன்னரைக் கடும் வெப்பு நோய் தாக்க "ஆ! என்றலறி வீழ்கின்றார்" (மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்)!!

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பூமர கன்றுகள் நாட்டப்பட்டன




தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் சூழலில் பூ மரக் கன்றுகளை நாட்டி வளர்க்கும் நல்ல முயற்சியை தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியார் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

கோவிலுக்கு செல்லும் போது வெறுங்கையுடன் செல்லாதே என நம் முன்னோர்கள் நமது சமூகத்தை சொல்லி வளர்த்தார்கள். இதன் பொருள் கையில் பணத்தை எடுச் சென்று உண்டியலில் போடுங்கள் என்பதல்ல ஆலயத்திற்கு செல்லும் போது ஒரு பூவினைத் தன்னும் எடுத்துச் சென்று, ஆலயத்திற்கு கொடுத்து தொண்டு செய்யுங்கள் என்பதேயாகும். இறைவனுக்கும் ஆலயத்திற்கும் தொண்டு செய்யும் பழக்கத்தை சிறு வயது தொடக்கம் வளர்க்கும் எண்ணத்தை நம் முன்னோர்கள் நமக்கு தெளிவாக சொல்லித் தந்தார்கள்.

அப்பர் பெருமான் தனது உழவாரத் தொண்டின் மூலம் இறை பணி செய்தார்.தேவாரப் பதிகங்களை மட்டும் பாடாமல் தேவாரப் பதிகங்களைப் பாடிக் கொண்டு ஆலயங்களை சென்றடையும் போது, அங்குள்ள நிலையறிந்து உழவாரப்பணி செய்வது இவரது தலையாயக் கடனாக இருந்தது. அப்பரின் கையில் எப்பொழுதுமே உழவரப்படை என்ற கருவி இருக்கும். தள்ளாத வயதிலும் அவர் விடாது திருப்பணி செய்தார்.

ஆனால் தற்காலத்தில் ஆலயத்திற்கு தொண்டு செய்யும் எண்ணமும் சிந்தனையும் மக்களிடையே வெகுவாக குறைந்துள்ளது. தாங்கள் செய்யும் பாவங்களை இறக்கி வைக்கும் இடமாகவும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் வரமாக இறைவனிடம் பெற்றுக் கொள்ளும் வியாபார நிலையமாகவும் பலர் ஆலயங்களை எண்ணத் தொடங்கி விட்டதன் விளைவு, தொண்டு செய்யும் நற்சிந்தனை மனதில் குடி கொள்வதில்லை என்ற கவலை நம் சமயப் பெரியவர்களுக்கு உள்ளது. ஆலயங்களை சுற்றி பூ மரங்களை வளர்க்கும் போது அந்த ஆலயத்தில் உறைந்துள்ள தெய்வத்திற்கு தேவையான

பூக்களை பறிக்க முடிவதுடன், ஆலயச் சூழலும் மிகவும் அழகு பெறும்.
இந்த உயரிய சிந்தனையின் வெளிப்பாடாகவே தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் சூழலில் பூ மரக்கன்றுகளை நடும் நல்லதொரு முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பூமரத் தோட்டம் ஒன்று உள்ளதுடன் ஏராளமான பூமரக் மரங்களும் உள்ளன. அவற்றை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் மேலும் பல பூ மரங்களை நட்டு வளர்க்கும் நல்லதொரு முயற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## மாவைக் கந்தன் மகோற்சவத்தில் மீண்டும் பழைய நடைமுறை



மாவைக் கந்தவேள் பெருமானின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30.06.2025ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

கொடியேற்ற கொடிச் சீலை வரும் 25.06.2025ம் திகதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு கொல்லங்கலட்டி முதலியாப்பிள்ளை மடத்தில் இருந்து மாவைக் கந்தவேள் பெருமான் ஆலயத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது.



வலி வடக்கு இடப் பெயர்விற்கு முன்னர் மாவைக் கந்தவேள் பெருமானின் வருடாந்த உற்வசத்திற்குரிய கொடிச்சீலை இங்கு இருந்துதான் எடுத்துவரப்பட்டு கொடியேற்ற மஹோற்சவம் நடைபெறுவது வழமையாக இருந்து வந்துள்ளது.

இருப்பினும் மிக நீண்ட காலத்திற்கு பின்பு இந்த ஆண்டு மாவைக் கந்தவேள் பெருமானின் மஹோற்சவம் புதிதாக அமையப் பெற்ற வெள்ளி கொடிஸ்தம்பத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதால், முன்பு



பின்பற்றப்பட்ட நடைமுறையின் கீழ் எதிர்வரும் 25.06.2025ம் திகதி கொல்லங்கலட்டி முதலியாப்பிள்ளை மடத்தில் இருந்து கொடிச் சீலை எடுத்து வரப்படவுள்ளது.

எனவே அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு மாவைக் கந்தவேள் பெருமான் அடியார்களை மடத்திற்கு வருகை தருமாறு ஆதீனப் பேரரசு ஐயா அவர்கள் அன்புடன் அழைத்து நிற்கிறார்.

எதிர்வரும் 27.06.2025ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொடிப்புடவை ஊர்வலம் நடைபெற்று அதனை தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு வைரவர் மடை நடைபெறும். 28.06.2025ம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம் நடைபெறும். 30.06.2025ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணி தொடக்கம் 10.00 மணி வரை பூர்வாங்கம் நடைபெற்று, மு.ப 10.15 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெறும். சரியாக நண்பகல் 12.06 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.

எதிர்வரும் 30.06.2025ம் திகதி புதிதாக அமையப் பெற்ற வெள்ளி கொடிஸ்தம்பத்தில் கொடியேற்ற வைபவம் பல ஆண்டுகளுக்கு பின்பு நடைபெறவுள்ளதால், மாவைக் கந்தவேள் பெருமான் அடியார்கள் அனைவரையும் மாவை ஆதீனப் பேரரசு ஐயா அவர்கள் அன்புடன் அழைத்து நிற்கின்றார்.